Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூஎ] யாழ்ப்பாணம்:- மன்மத ஞூ ஆடி மீ உ0 உ வெள்ளிக்கிழமை (5 AUGUST. 1955) [இல - கஅ]

ஆசிரியல் வலை:

## பாராளுமன்ற அவைத் தலைவரும் பரிதாபப்படுகிறார்

—:0:—

### பேச்சுப் பண்பாட்டிற் பிற்போக்கா?

பெற்றோரைப் பிள்ளைகள் 'நீ—நான்' என்றழைக்கும் காலம், கணவனை மனைவி பேர் சொல்லிக் கூப்பிடும் காலம், ஆசிரியர்களை மாணாக்கர்கள் 'ஓய்' என்று உரப்பும் காலம் — இந்தக்காலத்திலே பாராளுமன்றத்திலே பேச்சுப் பண்பாட்டிற் பிற்போக்குண்டாகிவிட்டதென்று அவைத் தலைவர் பரிதாபப்படுகின்றாராம்! என்ன விந்தை!!

சட்ட நிருபணசபைக் காலத்திலே பேச்சுப்போர் நிகழ்ந்ததோ என்று அரசியல் மாணவர்கள் அவாக்கொள்வார்கள். சந்தர்ப்பங் கண்டு பேச்சு நெருக்கடி விளைந்தால் அப்பொழுது எழும் வாய் வீச்சுகள் எல்லாம் சங்க காலப் புலவர்களின் செய்யுட் போட்டிபோல விறுவிறுப்பாக இருக்கும். இராமநாத வள்ளல் ஒருபக்கம் அரசாங்க உத்தியோக அங்கத்தவர்களும் தேசாதிபதியும் மறுபக்கமாகச் சொற்போர் நடத்துவார்கள். நடத்துபவர்களுக்கும் அதைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கும் மன எழுச்சி உண்டாகும். sir. யேம்சு பீரிசு, திரு. E. W. பெரோ போன்றவர்கள நன்கு வாதாடுவார்கள்.

#### மன்றத்திலே மோனை எதுகை!

அரசாங்க சபையிலும் ஓரளவுக்கு உருசிகரமான வாக்குவாதங்கள் நடைபெற்றன. பாராளுமன்றத்திலே இப்பொழுது ஒவ்வொருநாளும் இந்த வாய்வீச்சு (Breeze) நடக்கின்றதன்மையிலேயே அதன் நயம் எவ்வாறிருக்கும் என்றனுமானிக்கலாம். அங்கத் வருக்கு அங்கத்தவர்கள் பட்டஞ்சூட்டுவதையும் வாழ்க்கை அந்தரங்கங்களை அம்பலப்படுத்துவதையும் ஒரு அரசியல் மன்றத்திற் காணபதென்றாற் பேச்சுப் பண்பாட்டின் பெருமையை என்னென்றுரைப்பது!

காற்காலி வீச்சு முதலிய ஆர்ப்பாட்டங்களில்லையே யென்று திருப்தியடைந்த அரசியல் விமரசகர்கள் சொற்சுவையில்லாத பேச்சுப்போரையும் பட்டஞ்சூட்டும பரிகாசப் போட்டியையும கண்டு கலக்க மடைந்துவிட்டார்கள். நாட்டின் பரிபாலனத்துக்காக கூடும் மன்றத் தவர்கள போட்டிப் பேச்சு நிகழ்த்திற்பதால் இக்நாட்டு மக்களின் பண்பாட்டுக்கே கேடு விளையும என்று அறிஞர்கள அஞ்சுகின்றார்கள்.

மன்றப் புலவர்களும் மலிந்துவிட்டார்கள், காலம் இடங் கொடுக்கின்றது. தெங்கனுப் பாட்டும் தெம்மாங்கும் பாடுபவர்களும் புலவர்களே. நாலடி, காற்சீர் அடுக்கிவிட்டுத் தாமே மகிழ்ந்தமைகின்றவர்களும் புலவர்களே. இவ்வாறு இலங்கை ஒரு புலவர் நாடாக வளர்ச்சியுறும காலத்திற் பாராளுமன்றத்தில் ஏன் 'மோனை எதுகை' விளையாட்டு இருக்கக்கூடாது!

### கோவா மக்கள் கேட்டுக்கொள்வது

கோவாவுக்குப் பொருளாதார உதவி செய்வதை நிறுத்துமாறு கேட்டுக்கொள்வதற்கு கோவா தேசிய மகாநாட்டார் மகாநாட்டினரின் குழுஉக்களை இலங்கைக்கும் பாக்கிஸ்தானுக்கும் அனுப்பத் தீர்மானித்துள்ளனராம்.

### ஒருமொழி ஆட்சியே வேண்டுமாம்

இரு அரசாங்க மொழிகளிருப்பது இரு மனைவியரை மணஞ் செய்து வாழுதல் போலாகுமென்றும அது இன்பவாழ்க்கையாக மாட்டாதென்றும் ஆகையினாலே பெரும்பான்மையோர் பேசும் மொழியாகிய சிங்களமே தனி ஆட்சிமொழியாயிருக்க வேண்டுமென்றும் ஸ்ரீ பி. வெஹறகொட கந்தளாய்ப் பகுதியிலுள்ள சிங்களஜாதி சங்கம் என்ற சங்கக்கூட்டத்திலே பேசும போது கூறினாராம்.

### யூகோ அறிந்ததை வல்லரசுகள் எப்பொழுது அறியுமோ?

பத்திரிகை நிருபர் கூட்டமொன்றிலே கேள்வி ஒன்றுக்கு மறுமொழி கொடுக்கும் பொழுது கோவா இந்தியாவின் ஒரு பகுதியே என்பதில் யூகோசிலாவிய அரசாங்கத்துக்கு எவவித சந்தேகமுமில்லை. ஆகையினாலே இந்தியாவின் கேள்வி இயல்பானதே. அஃதும் சமாதான முறையில் கேட்கப்படுவதாற் கூடிய வலியுடையதாயிருக்கின்றது என்று யூகோசிலாவிய வெளிநாட்டுக்காரியாலயத்தார் விடையிறுத்தனர்.

### கோவா பற்றிக் கத்தோலிக்க மேலோர் கருத்து

பாப்பாண்டவர் நகரத்திலிருந்து வெளிவருகின்ற "ஓ செர்வா தோர் ரோமானோ" என்னும் பத்திரிகை கோவாப் பிணக்குப்பற்றி எழுதும்போது கோவர்ப் பிணக்கில் இந்திய அரசாங்கமோ அல்லது போர்த்துக்கேய அரசாங்கமோ பலாத்கார முறையைக் கையாளுதலைத் தவிர்க்கவேண்டும் என்னும் கருத்தை வெளியிட்டதோடுகோவாக் காரியம் ஒரு சிக்கலான அரசியல் விஷயமே யன்றிச் சமயவிஷயமல்ல என்றும் கூறியிருக்கின்றது.

## திருக்கேதீச்சரத் திருப்பணி

### இது முறையாகுமா?

இரத்தினபுரியைச் சேர்ந்த அக்கெறெல்லை என்னுமிடத்தில் குத்துக் காயங்களால் இரத்தம் பாய்ந்து கொண்டிருந்த நாலுபெண்களை கஹாவத்தை அரசாங்க வைத்தியசாலைக்குக் கொண்டுபோவதற்கு உந்து வண்டி (கார்) கிடையாமையால் அவர்கள ஆறுமைல் தூரத்துக்குப் படுக்கைகளில் படுத்திருக்கத் தோள்மீது கொண்டு போகப்பட்டனர். உந்து வண்டி கிடையாமைக்குக் காரணம் என்னவென்றால் அப்பெண்கள் தீண்டாச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதாம் ——

### செல்வச்சந்நிதி கொடியேற்றம்

செல்வச்சந்நிதி முருகப் பெருமானது திருக்கோயிலில் கொடியேற்றத் திருவிழா வாக்கிய பஞ்சாங்கத்தில் ஆவணி மூன்றாந்திகதி என்றிருப்பது சரியல்ல என்றும் ஆவணி மாதம் 1-ந் திகதி (17-8-55) புதன் கிழமை இரவு இரண்டுமணியளவில் கொடியேற்றம ஆரம்பமாகுமென்றும் ஷெ கோயில் ஆதீன கர்த்தா ஸ்ரீ கா. முத்[illegible] ஐயர் அவர்கள் அறியத் தருகின்றார்.

ஈழநாட்டின் சைவச் சிறப்புக்குச் சிகரமாய் விளங்கும் தலம் திருக்கேதீச்சரமாகும் அது தமிழ்நாட்டுச்சிவஸ்தலங்களுள் அதி உன்னதமான தலமும், பிறவிப் பிணியை நீக்கும் அருமருந்தன்ன பேறையுமாகும். பண்டொருகால் பழம்பெரு சைவ இராசதானியாக இருந்த தலம் — இடைக் காலத்தில் யாதோ ஒரு காரணத்தினால் அழிந்தொழிந்தது. அது மீண்டும் சீருஞ் சிறப்பும் பெற்றோங்கச் சைவ மக்களின அருந்தவப் பேறாய் உதித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் திருவாக்கு அவர் மெய்யன்பர்களமூலம் பலித்துக்கொண்டு வருகின்றது. இவ்வாண்டு கோயில் வேலைகள செவ்வனே நடைபெறுகின்றன. சுற்றுப் பிராகாரக் கோயில்கள் எல்லாம் பண்டிகை மட்டத்தளவில் கட்டப்படுகின்றன. சுற்றுப் பிரகாரக் கொட்டகைத் தூண்களுக்கும் அத்திவாரம இடப்பட்டிருக்கிறது. வசந்த மண்டபத்திற்கும் அத்திபாரம இட்டுக் கற்கள் காட்டப்படுகின்றன. வீதிகள் வகுக்கப் பெற்றிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்களைச் சைவ மக்கள் நினைவுறும் வண்ணமாய் பெருந்தொகைப் பணம செலவழித்து ஒரு வாசிகசாலையை அரசினர் உதவியுடன் அன்பர்கள் சேர்ந்து வடக்கு வீதியில் நிறுவியிருக்கின்றனர்.

ஆதலால் ஒவ்வொரு சைவத[illegible] திருவருள் பெறுவார்களாக.

— செ. கோ.

## தமிழ்மறைக்கழகம்

### அகில இலங்கைத் திருக்குறள் மனனப் போட்டி

1956-ம் ஆண்டு பங்குனி (மார்ச்)மாதம் அகிலஇலங்கையிலுமுள்ளவர்கள் பங்குபற்றக்கூடியதாகத் திருக்குறள்மனனப்போட்டியொன்றைநடாத்தத்தமிழ்மறைக்கழகம் முடிவு செய்துள்ளது. கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாய்ப் போட்டி நடத்தப்படும் 1-1-42 க்குப் பின் பிறந்தவர்கள் கீழ்ப் பிரிவிலும், 1-1-35 க்குப் பின் பிறந்தவர்கள் மத்திய பிரிவிலும பங்குபற்றலாம். மேற்பிரிவுக்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை.

கீழ்ப்பிரிவுக்கு அறத்துப் பாலும், மத்திய பிரிவுக்கு அறத்துப்பாலும் பொருட் பாலும், மேற்பிரிவுக்கு திருக்குறள் முழுவதும் போட்டிக்குரிய பகுதிகளாகும்.

1956-ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 17-ம் திகதி ஒரு தேர்வு நடாத்திப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசில்களும் தக்க திறமை காட்டுவோர்க்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

#### பரிசில்களின் விபரம்

| | கீழ்ப்பிரிவு | மத்தியபிரிவு | மேற்பிரிவு |
|---|---|---|---|
| 1ம் பரிசு | ரூபா 75 பெறுமதியான தங்கப்பதக்கம் | ரூபா 100 பெறுமதியான தங்கப்பதக்கம் | ரூபா 125பெறுமதியான தங்கப்பதக்கம் |
| 2ம் பரிசு | ரூபா 50 பெறுமதியான தங்கப் பதக்கம் | ரூபா 60 பெறுமதியானதங்கப்பதக்கம் | ரூபா 75 பெறுமதியான தங்கப் பதக்கம் |
| 3ம் பரிசு | ரூபா 25 பெறுமதியான வெள்ளிப் பதக்கம் | ரூபா 30 பெறுமதியான வெள்ளிப் பதக்கம் | ரூபா 40 பெறுமதியான வெள்ளிப் பதக்கம் |

ஒவ்வொரு பிரிவிலும் திறமையாகத் தேறும் பெண்களுக்கு ரூபா 50 பெறுமதியான தங்கப்பதக்கம் வழங்கப்படும். மிகக் குறைந்த வயதுள்ளவர்க்கு கீழ்ப்பிரிவில் விசேட பரிசுண்டு. போட்டியிற் பங்குபற்றுவோர் 1-11-55 க்கு முன தமிழ் மறைக் கழகச் செயலாளருக்குத் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும் என்றும் விபரங்களுக்கு :

செயலாளர், தமிழ்மறைக்கழகம், 44-ம் இலக்கம் 33-வது ஒழுங்கை, கொழும்பு 6. என்று எழுதலாம் என்றும் கழகத்தார் அறிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS
திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

யாழ். மன்மத ௵ ஆடி மீ ௨0௨ வெள்ளிக்கிழமை

## சுட்டுத் தள்ளும் கெட்டித்தனம்!

—0—

பாராளுமன்றத்திலே சொற்பொழிவுகள் எல்லாம் மற்போர் முறையில் நடைபெறுவதை நோக்கும் பொழுது அரசியல் ஞானம் இலங்கையில் இப்பொழுது இல்லா தொழிந்து விட்டதென்றே கூறவேண்டியிருக்கின்றது. இலங்கைவாழ் இந்தியர்களைப்பற்றிப் பேசும்பொழுதெல்லாம் இலங்கைத் தமிழர்கள் இந்தியத் தமிழர்கள் என்று வேற்றுமை ஒன்றை நிலை நாட்டக்கூடிய வகையிலே கிராமங்களைத் தோற்றுவிப்பதோடமையாது பல அங்கத்தவர்கள் பொருந்தாக் கருத்துக்களையும் பொல்லாங்கான வசை மொழிகளையும் எடுத்தாளுகின்றனர்.

பாரதவரலாற்றிலே அரசமன்றத்திலே நூற்றொருவர் நடந்தமுறைகளை இதிகாசம் மூலம் அறிந்திருப்பவர்கள் இப்பொழுது பாராளுமன்றத்திலே அங்கத்தவர்கள் கூறும் புத்தி மொழிகளை ஒப்பு நோக்கி ஆராய்ந்தால் புன்மொழிகளும் துன்மொழிகளும் எவ்வளவு தூரம் கேட்டை விளைவிக்கக்கூடியன என்பதை யறியலாம். திரு. R. G. சேனநாயகவுக்கு இரத்தம் கொதித்த வண்ணம் இருக்கலாம். அரசியல் அரங்கில் தனது எண்ணம் கைக்கொள்ளப்படவில்லையென்று மனமுடைந்தகளைப்பினால் கலக்கம் எழுந்திருக்கலாம். ஆனால், சுடுங்கள் கொல்லுங்கள் என்று சொல்லும் மனப்பான்மையுடையவராய் மன்றத்திலே சொற்பெருக்கும் தூரம் மதிநிலை மாறியிருக்கக் கூடுமா? இல்லையேல் இயல்பாகவே இந்தியர்கள்பால வெறுப்பும் வெகுளியுங் கொண்டவர் என்பது இவரால் வெளியாகின்றது.

இலங்கை இந்திய உடன்படிக்கையொன்றைத் தெஹிவளை மாநகரிலே இருபிரதமர்களும் இயற்றியதும் அப்பொழுதே அரசமொழிகளைப்பற்றி ஒரு ஐயம் எழக்கூடியவண்ணம் சொற்றொடர் புகுத்தித் தமிழினத்தாருக்கு மறைமுகமாய்க் கெடுதி வளைவித்ததும் அந்த ஒப்பந்தத்தைத்தா

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### தமிழுக்காகத் தாண்டவம் ஆடுவோர்

தாய்மொழிப் பற்றுள்ளவர்கள் என்று காட்டி அரசியல் வேட்டையாடப் புறப்பட்டுவிட்டார்கள் இடது சாரிகள். சிங்களமே அரசமொழி என்று கங்கணங் கட்டி வெள்ளவத்தையில் மாநகர சங்கத் தேர்தலில மார்பு தட்டியவர்கள் இடது சாரிகள். கழுத்துறை நகர சங்கத்திலே ஒருமொழி ஆட்சி உருவாக்க முயன்றவர்கள் இடதுசாரிகள். இப்பொழுது கும்பலிலே கோவிந்தாப்போடத் தொடங்கிவிட்டார்கள் அந்த அந்த ஊருக்குத் தக்க விதமாக ஆட்டம் ஆடிக்கொண்டு வரும் இந்த இடதுசாரிகள் யாழ்ப்பாணத்திலே பரோபகார வேடந் தாங்கித் தமிழுக்காகக் கண்ணீர் வடிக்கின்றார்களே! அரசியல் மாயம் இருந்தவாறென்னே!

### நியாயமி வீட்டிலே சட்ட மறுப்பு

மதுவிலக்குக் கொள்கைக்கு ஐ. தே. கட்சி உடம்பாடுடையது. அரசியல் ஆதிக்கக் கட்சி அதற்கு 'ஆம்' என்று சொல்லிவிட்டது, ஆனால் பாராளுமன்ற மண்டபத்திலுள்ளேயே உள்ள நீர் ஆகாரத்தில் மது முக்கியமானதாயிருக்கின்றது. மதுவொழிப்புச் சட்டமான பின்புதான் பாராளுமன்றத்து மதுச் சிறுபான நிலையம் மூடப்படுமாம்! ஆளை ஆட்சாட்டிக் காலத்தைச் சமாளித்துவிடலாம் என்று ஐ. தே. கட்சி நினைக்கின்றது போலும். மதுவிலக்குக் கொள்கைபோலவே இருமொழிகளின் ஒழுக்குகளும் வரும் என்று நினைத்துத் தமிழகம் அஞ்சுவதில் என்ன பிழையிருக்கின்றது?

### அர்ப்பணம் செய்வது யார் பொருளை?

தமிழகத்திலே உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ்செய்வது மரபு வழிவந்த வீரமாகும். பரோபகாரிகள் தியாகிகள் ஆகையால் தமக்குரியவற்றை அர்ப்பணஞ் செய்வது முறையென மதித்தனர். ஆனால் பாராளுமன்ற அங்கத்தவர் நிலைமையை ஒருவர் இனமொருவருக்கு அர்ப்பணஞ் செய்வது தமிழகத்துக்கு மதிப்பைக் கொடுக்குமா? அப்படியானால் மேடையிலே மாலைப்பாரத்திலே சொல்வதியதென அறியாது நிற்கும் நிலையிலே — தமிழகத்தையே

தொடர்ச்சி 5 ம் பக்கம்.

லும் இந் நாட்டரசாங்கம் உள்ளபடி செய்கை முறையிற் கொண்டுவராது காலந் தாழ்த்தியும் வேறுபட விதியமைத்தும் இந்திய மக்களுக்கு இன்னல் விளைவிக்கின்றமையும் யாவரும் அறிவர். இந் நிலைமையிலே இடர்ப்படுகின்ற இந்தியர்களை இன்னமும் பல அல்லல்களுக்குள்ளாக்கி இந் நாட்டைவிட்டு வெளியேற்றத் துணிந்து நிற்கும் திரு சேனநாயகக் குழுவினரின் இறுமாப்புத்தான் என்னேயோ? பூவுலகிலுள்ளோரைச் சுட்டுத் தள்ளிவிட்டுப் புவனம் முழுவதையும் ஒருகுடைக்கீழ் ஆளலாமென்று ஆணவங்கொண்டெழுந்த கட்டிலரைத் திரு. சேனநாயக நினைவுக்கழைக்கட்டும். பாஞ்சாலத்திலே படுகொலைநிகழ்த்த ஆணைகொடுத்த ஆங்கிலேய அரசாங்கம் ஆங்கு இப்பொழுது இருக்கின்றதா என்று இவர் எண்ணிப் பார்க்கட்டும். அடக்குமுறைக்கு அஞ்சும் கோழைகள் அல்ல இந்தியர்கள். அநீதியைக் கண்டு அஞ்சலி செய்கின்றவர்கள் அல்ல இந்தியர்கள். அன்பின் ஆற்றலை உணர்ந்தவர்கள். இதோபதேசத்தின் இன்பத்தை அறிந்தவர்கள் மனித குலத்துக்கு மாறான வழியிற் செல்லமாட்டார்கள். மறந்தால், கைவலிமையாற் பிறப்புரிமையைப் பறித்துச் செல்பவர்களுடன் நேருக்கு நேராக நின்று நீதி கேட்கும் வீரர்கள். இந்திய வெறுப்புப் பூண்ட சிங்களத் தலைவர்களே! சற்று நில்லுங்கள்.

மகாகவி காளிதாசரின்

# குமாரசம்பவம்

தமிழாக்கம்
( பரமேஸ்வரக்கழகம் — இராமச்சந்திரன் )

### காப்பு

#### விநாயகக் கடவுள் வணக்கம்

வெண்ணி றந்தனி ஞற்றிரு நீற்றையும்
மேவு மைங்கரந் தம்மினந் தக்கரத்
துண்மை யோடுயர் குஞ்சர மாமுகத்
தோமென் றோங்கும் பிரணவந் தன்னையுங்
கண்முன் காட்டிக் கருதுவித் தாண்டருள்
கடவுள் தாளிணை கைதொழு தேத்தியே
தண்ண ருந்தமி ழாற்சிவ மைந்தனின்
சம்ப வந்தனைச் சாற்றுதல் செய்குவாம்.

திருநீறு, திருவைந்தெழுத்து, பிரணவம் ஆகிய இவற்றைக்காட்டி, உய்யக்கொண்டருளும் விநாயகக்கடவுளை வணங்கி, குமாரக்கடவுளின் திருவவதாரத்தைப்பற்றிக் கூறுவாம் என்பது பொருள்.

### நூல்

1. இமய மலை உலகை அளக்கும் அளவுகோல் எனக் கூறல்.
வடக்கின் மாநில பாத்திரைக் கோலதாய்
மன்னி மறறை வரைக்குல மன்னெனக்
குக்கி ஞெடு குணக்கடல் உள்ளிடங்
கொண்ட தெய்வ குணத்த திமயமே.

2. இமயமலைச் செல்வம் இத்தகையது எனக்கூறல்
இமயங் கன்றென இத்தரை ஆனென
எற்ற மேரு இது கறப் போனென
அமைய மற்றை அசலங்கள் சூவிகை
அரதனத்தையும் ஆரக் கறந்தவே.

3 இமயமலைக்காந்தி அளவிடற்கரியது எனக்கூறல்.
இனைய மாமணி எற்பொலி வெய்திடும்
இமய மால்வரைக் கெட்டுணை யேனும்பெண்
பனியினல்வரு பங்கமுண் டோமறு
பால்வெண் டிங்கட்குப் பங்கம தாக்குமோ.

4. இதுவுமது
தேவ கன்னியர் செய்யும் அணிக் கொலாஞ்
சேரு மவ்வரைத் தேசுறு செங்கதிர்
ஆவ அவ்விடத் தண்டுறு மஞ்சினை
அந்திவா னென ஆக்கிடு மென்றுமே.

5. இமயமலை உயர்ச்சி இது எனல்
சாரல் மஞ்சருள் தண்ணிழல் நேடியே
சாருஞ் சித்தர தண்மூகில் தாமழைத்
தாரை தம்மைத் தருதலிற் கோட்டிடைத்
தாவி அங்கு தபனனைச் சார்வரால்.

(தொடரும்)

# பரம்பரைப் புலவர் சம்பந்தர்

—:0:—

[ புரிசை சு. முருகேசமுதலியார் அவர்கள் சைவபரிபாலனசபை திரு. மு. மயில்வாகனம் அவர்களுக்கு எழுதியது ]

பெரியார் திருஞானசம்பந்தர் பிரவுகேட்டு திடுக்கிட்டேன்.

தந்தியைக் கண்டவுடன் ஒன்றுந் தோன்றவில்லை. எவ்வகை ஆபத்தோவெனத் திகைத்தேன்.

இந்துசாதனத்தால் விபரந் தெரிந்தேன். முதல் நாள் விரிவுரையாற்றி மறுநாட் காலையியல்பாக நீராடித் திருவெண்ணீறு அணிந்தாங்கு அமர்ந்தேதுமின்றித் திருமேனியை விடுத்துத் தெய்வமாக விளங்குதல் என்பது ஒரு எளிய செயலல்லவே!

"கூற்றங் குதித்தலுங்" கை கூடப்பெற்ற பெருந்தவனென்பதன்றிப் பிறிதென் சொல்வது!

அண்ணலின் அருந்தவத்திற் கேற்ற பெருநலத்தை ஆண்டவன் அருளினன். ஆயினும் சைவவுலகம் ஒரு ஒப்பற்ற உத்தமத் தலைமகனை யிழந்தது வண்ணைப்பதி ஒரு நகைச்சதுர்மொழியாளனை யிழந்தது. சைவபரிபாலனப் பெருமன்றம் ஒரு அகம்புறம் ஒத்த அன்பின் பண்டாரத்தைப் பறிகொடுத்தது.

பெரியார் தனித்திருந்து பேசுங்கால் இரண்டொரு முறை அடுத்த முறை தங்கள் விரிவுரையைக் கேட்கக்கூடுமோவென ஐயுறுகிறேனெனக் கூறியதுண்டு. அதுபோது என்ன இப்படிக் கூறுகின்றீர்களேயென ஐயுற்றேன். இவ்வளவு விரைவில் அகல்வார்களென அறியாதொழிந்தேன்.

கந்தபுராணத்தை நன்கு பயின்று விரிவுரையாற்றுகின்றேனென என்னை நாடு மதிக்கிறது. ஆனல் கந்தபுராணப் பத்திமைக்கும் படிப்பனைக்கும் எனக்குப் பிச்சை தரத்தக்க பெருஞ் செல்வராகப் பெரியார் சம்பந்தர் விளங்கினர்.

பெரியார் தொன்று தொட்டு வரும் பரம்பரைப் புலவராதலால் பல நுண்பொருள்களை யுணர்ந்திருந்தார்.

அவர் சபையில் எனது விரிவுரையை விழைவார். யான் தனிமையில் அவரது நுண்பொருளை யாசிப்பேன். நமது வினையிது பேசிப் பயனென்; பெருங்கணையைப் பிரிந்தோம். பிரிவருந் திருவைப் பிரிந்து வருந்தும் அம்மையாரவர்களுக்கும் அன்புடைச் செல்வ மக்களுக்கும் எனது வருத்தமும் ஆறுதல் மொழியுங் கூறுகின்றேன். சம்பந்தர் சாந்தி பெறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் தன்மை

## இக்கால மனதுக்கேற்ற விளக்கம்

கடவுளைப் பதி, என்றும் ஆன்மாவைப் பசுவென்றும் அழைப்பர். இவை இரண்டும் நெருங்கியதொடர்புடையனவென்றாலும் பாசங்கள் ஆன்மாவின் அறிவை மறைத்து விடும். அரசகுல மகன் ஒருவன் வேட்டுவ குடிசையில் தங்கி வளரும் காலத்து வேட்டுவர்களினது தொழிலே தனது இயல்பான தொழிலெனக் கருதுகிறான். அவ்வாறே ஆன்மாவும் ஐம்புலன்கள் வழியே இழுக்கப்படும்போது அதன் எண்ணங்களையும் தொழிலையும் தனது எண்ணங்களாகவும் தொழிலாகவும் நினைக்கின்றது. உயிர்க் குணங்கள் அற்றவர் பதி. இறைவன் எப்படிப்பட்டவர். அவரின் குணங்கள் என்ன என்று அறிய யாரும் விரும்புவது இயற்கை. அவர் எங்கு இருக்கிறார், அவரின் பெயரென்ன, காலமென்ன என்று ஆராய விரும்புகின்றது தற்கால நவீன மனம். சிவபெருமான் எங்கும் நிறைந்தவர். ஆகாயம், நிலம், நீர், தீ, காற்று ஆகிய பஞ்ச பூதங்கள் அவருடைய உருவம் எனலாம். உயிரிலும் ஊனிலும் எங்கும் நிறைந்திருக்கிறார். சூரியன், சந்திரன், முதலிய பொருட்களாக விளங்குகின்றார்.

“பாரவன்காண் விசும்பவன்காண் பவ்வம்தான் பனிவரைகள இரவினொடு பகலாய் நின்ற, சீரவன் காண்” என்று திருத்தாண்டகம் கூறும். ‘பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே” என்றார் மணிவாசகர். ஓர் இடம் இல்லாமல் எங்கும் அலையும் ஒருவரை என்ன சொல்லுகிறோம். அவர் எங்கே இருப்பவர்? என யாரும் கேட்டால் அவர் ஊர் இல்லாதவர் என்று கூறுகிறோம் ஆகவே எங்கும் பரந்திருக்கும் இறைவனுக்கும் ஊர் இல்லை.

பிறப்பு உண்டாயின் இறப்பும் உண்டு. தொடக்கம் உண்டாயின் முடிவும் உண்டு. இறைவனுக்கு தொடக்கம் இல்லை. எனவே போக்குமில்லை, “பூதங்கள்தோறும் நின்றாயெனின் அல்லால் போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர் கீதங்கள் பாடுதல்.... ....” என்றும் “ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியை” என்றும் மணிவாசகர் கூறியுள்ளார்.

உருவம், செய்கைகள், குணங்கள் ஒன்றும் இறைவனுக்கு இல்லை, “ஒரு நாமம் ஓருருவ மொன்றுமில்லார்க் காயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ” என்றார் மணிவாசகர். உருவமில்லை என்று சொல்லுகிறோமே ஆனால் உருவத்திருமேனிகள் உண்டுஎன நாம் படிக்கவில்லையா? என்று சிலர் ஐயுறலாம்.

“தனக்கொன்றின் றிமருளுரு யுயிருக் கென்றேயாகினன் .... ....” என்ற சித்தியார் வாக்கால் உருவம் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் உருவமே என்பது தெளிவு. “ஆவிகட்கருளுமாற்றால் அறுமுகம் கொண்டானன்றே” என்பது கச்சியப்பர் வாக்கு. கருவி, புலன், காண்பவன், காட்சியாகிய நால்வகைப் பொருளையும் காட்டுபவர் கடவுளே. இவற்றை உயிரினில கலந்துநின்று காட்டினாலும் உயிர்களைப் பற்றும பாசம் இறைவனைப் பற்றமாட்டாது. “வலிகொள் வான்றொடர் பூண்பதின்றாம்” என்னும் தொடர் இதனை விளக்குகின்றது. ‘இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம’’ என்றார் ஒளவையார்.

இறைவனுக்கு ஊரில்லை, குணமில்லை, குறிகளில்லை, போக்கிலலை, வரவில்லை என்பதை மேற்காட்டிய ஏதுக்களிலிருந்து அறிந்தோம். அத்துடன் அவர் தனக்கு நிகர், மேல் எனச் சொல்ல ஒருவர் இல்லாதவர். உயிர்கள் தோறும கலந்துள்ளவர் அடியார் மனதில் அமர்ந்து விளங்குகின்றார்.

ஸ்ரீ வ. குகசர்மா

# வளம் பொருந்திய தமிழ் மொழி

## தமிழ் மக்கள் செய்ய வேண்டிய தொண்டு

உலகிலுள்ள மக்களால் பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. ஒவ்வோர் சாதியினர்க்கும் ஒவ்வொரு மொழி உள்ளது. எமது நாட்டிலே நான்கு முக்கியமான சாதியினர் வசிக்கின்றார்கள. அவர்கள் சிங்களவர், தமிழர், சோனகர், பறங்கியர் என அழைக்கப்படுகின்றனர். சிங்களவர் சிங்களத்தையும், சோனகர் தமிழையும், தமிழர் தமிழையும், பறங்கியர் ஆங்கிலத்தையும்பேசுகிறார்கள். ஆங்கிலமொழியைப் பொதுமொழியாக எல்லாச் சாதியினரும் பேசுகின்றார்கள். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர் சோனகர் ஆகிய நாம் அதனை ஆர்வத்துடன் கற்க வேண்டும்.

எமது முன்னோர் தமிழை நன்கு கற்றிருந்தார்கள். தமிழின் இனிமையையும் அதன் ஆழ்ந்த கருத்துக்களையும் நன்கு அறிந்திருந்தார்கள் நாம கற்பதற்கென நூற்றுக் கணக்கான தமிழ் நூல்களை

தெல்லியூர்
ஸ்ரீ சி. கணேசலிங்க ஐயர்

இயற்றி வெளியிட்டார்கள். அது மாத்திரமா? ஏட்டுச் சுவடிகளில் இருந்த எத்தனையோ அருமை பொக்கிஷங்களை யெல்லாம புத்தக ரூபத்தில் வரச் செய்தார்கள். இந்தப் புலவர் பெருமக்களின் சேவையால் அல்லவா இன்று நாம் தமிழைச் சுலபமாகக் கற்க முடிகின்றது. இவ்வாறு தமிழை வளர்த்த பெரியார்களுள் ஒருவரான வரகவி சுப்பிரமணிய பாரதியவர்கள் பலமொழிகளையும் கற்றார்கள. அவை யாவற்றிலும் தமிழே இனிமை தரும் என்பதை உணர்ந்தார்கள்.

உடனே “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்” என்று பாடினார்கள். இப்பெரியாரின் வாக்கியம் ஒன்றே தமிழின் பெருமையை வெள்ளிடை மலைபோல் விளக்குகின்றது.

தமிழ் அழியாத இலக்கண வரம்பைக் கொண்டது. எம் இறைவனான சிவபெருமானால் “பித்தா பிறைசூடி” “உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்” “தோடுடைய செவியன்” என்றெல்லாம் அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட பெருமையையுடையது. இன்னும் நாம் பிறந்து சிறுபராயத்திலே எமது தாய்தந்தையரை (சம்பந்தர் சிவபிரானை அழைத்ததுபோல்) “அம்மே அப்பா” என்று அழைத்ததும் தேன்போல் இனிய செந்தமிழினாலல்லவா? தமிழ்த் தெய்வமாகிய முருகன் கடைச்சங்க காலத்தில் புலவர்களுள் ஒருவராயிருந்து தமிழை ஆராய்ந்தும், ஔவையாரின் புலமையை உலகுக்கு அறியும்படி செய்தும் தமிழை வளர்த்தாரல்லவா? இவ்வாறு பலராலும் போற்றப்பட்டும் வளர்க்கப்பட்டும் வரும்மொழி தமிழ் மொழியாகும்.

தெய்வ சம்பந்தமானதும் இலகுவான நடையில் யாவர்க்கும் விளங்கக்கூடியதுமான மொழி தமிழ். உதாரணமாக “அறஞ் செயவிரும்பு” என்னும் அடியில் தொடங்கி எத்தனையோ தத்துவங்களைஎடுத்துக் கூறுவதும் இறவாத தன்மையைக் கொண்டதும் தமிழேயாகும். முற்காலத்தில் தமிழ் அரசர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள் தமிழை வளர்த்தார்கள். தமிழ் வித்துவான்களுக்குத், தகுந்த சன்மானஞ் செய்தார்கள். இதனால் தமிழ் அன்னை சீரும் சிறப்பும் பெற்று விளங்கினாள். பின் ஆங்கிலேயர் ஆட்சிதொடங்கியதும் இவைகள் யாவும் அற்றுப் போயின. “அரசனெவ்வழி குடிகளுமவ்வழி” என்ற கூற்றிற்கிணங்க யாவரும் தமிழைப் புறக்கணிக்கத் தலைப்பட்டனர். மீண்டும் சுதந்திரமடைந்ததும் தாய்மொழி சிறப்படையுங் காலம் ஆரம்பமாகியுள்ளது. இதனைத் தமிழ் மக்கள் பயன்படுத்தி ஆவன செய்யவேண்டும்.

“தெய்வப் புலவர்” என யாவராலும போற்றப்படும் திருவள்ளுவநாயனார் திருக்குறள் என்னும் திவ்விய நூலைத் தமிழர்களுக்கென இயற்றியுள்ளார். திருக்குறளின மேலான கருத்துக்களைக் கண்ணுற்ற மற்றும் சாதியினர் தங்கள் பாஷைகளிலெல்லாம் அதை மொழிபெயர்த்துள்ளார்கள. இது ஒன்றே தமிழின் பெருமைக்குச் சான்று பகர்கின்றது. திருக்குறள் 130 அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும பத்துப் பாட்டுக்கள்வீதம 1330 குறட்பாக்களையுடையது. இந்த 1330 குறட்பாக்களும் விலைமதித்தற்கரிய பொக்கிஷமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு குறளும் ஒழுகிய ஓசையும விழுமிய கருத்துமுடையது. இங்ஙனமாக இன்னும் எத்தனையோ சமய சாஸ்திரங்கள் இலக்கண இலக்கிய சம்பந்தமான நூல்கள் யாவும் தமிழ் மொழியில் அல்லவா மலிந்து கிடக்கின்றன. இவற்றை நம் அல்லும் பகலும் சிரத்தையுடன கற்க வேண்டும். அத்துடன் மற்றையோருக்கும இயன்றளவு உதவி செய்து கற்பிக்க வேண்டும. இவ் வித்தியா தானத்தை விருத்தி செய்வதனால் தமிழன்னை மேன்மையடைவாள். நாமும் நமது தமிழ் மொழியைப் பாதுகாத்தவர்களாவோம்.

## எதைத்தான் சொல்லக்கூடாது?

தம்மவராகிய தமிழ்மக்களைத் தாம் நேசிக்கிற அளவுக்கு மாத்திரமல்ல அதிலும் கூட என்று சொல்லத்தக்க அளவுக்குச் சிங்கள மக்களைத் தாம் நேசிப்பதாகவும் அதற்கு அறிகுறியாகத் தமது பிரதிநிதித்துவத்தையே ஒரு சிங்களத் தலைவருக்குக் கொடுக்கத் தாம் ஆயத்தமாயிருப்பதாகவும், இறம்புக்கனையில் நடந்த கூட்டமொன்றிலேபேசும்போது சாவகச்சேரிப் பிரதிநிதி ஸ்ரீ வே. குமாரசாமி கூறினாராம்.

தன்னுடைய இடத்துக்கு ஒரு சிங்களத் தலைவரும் சிங்களத் தொகுதிக்குத் தாமும் பிரதிநிதிகளாகக் கூடிய காலம் வரும் என்று தாம் கூறியதாக இப்பொழுது திரு. குமாரசுவாமி மேலே தந்த செய்தியைத் திருத்துகின்றார்.

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## தமிழில் அர்ச்சனை செய்வது தக்கது அன்று

உலகத்தில் பலவகைப்பட்ட மனிதர்கள் வசிக்கிறார்கள். கடவுள் என்ற எண்ணம் இல்லாதவர்களே பலர். வேதம் ஆகமம் என்னும் முதனூல்களும் எங்குஞ் செலலா. முனிவர்கள் முதலில் முன்னவனான இறைவனை வனங்களில் உபாசித்தனர். உபநிடதம் பொருள் நன்கு அறிந்த பெரியோர்கள் தியானம் மிகச் சிறந்த [illegible] திருமேனிகள் ஆ[illegible] ளின் கற்பனைப்படி உண்டாக்கப்பட்டன. சிவலிங்க பூசை முதன்முதல் சிவசக்தியே செய்தார். சிவபிரானின் வேறாகாத விநாயகர் குமரன் முதலியோரும் சிவார்ச்சனை புரிந்ததாக அறிகின்றோம். பிரமா, விட்டுணு முதலிய தேவர்கள் சிவபூசையால் கீர்த்தியடைந்தனர். நாவலரவர்கள் பெரிய புராண சூசனத்தைத் தமிழன்பர் [illegible] சமீபத்தில் கோவையில் சென்னை மந்திரி பகவத்சலமவர்கள் “தமிழில் அர்ச்சனை என்பது வீண் கிளர்ச்சி” என்று தமது கருத்தை வெளியிட்டார்கள். அறிவுடைய மக்கள் எவரும் சிவாபராதம் செய்ய முன்வரமாட்டார்கள். சமயத்திற்குச் சட்டம் செய்வது என்பது வெற்றதிகார முறையே! சமயநிலை இல்லாத மக்கள் பிறவிப்பயன் பெறுதல் முயற்கொம்புதான். அழிந்து போகும் உடலுக்கு வரும் மதிப்பும அழிந்து விடுமே! ஆன்ம நாயகரை - அரிய சிவ சாத்திரங்களை இகழ்ந்து மக்கள் துன்பக் கடலுள் படியலாமா? உற்றார் ஆருளரோ! உயிர் கொண்டு போம் பொழுது குற்றாலத்துறை கூத்தனல்லால நமக்கு உற்றார் ஆருளரோ! இது பொய்யா? இது தோத்திரம்.

வ. மு. இரத்தினேஸ்வர ஐயர்
உடுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமக்கு நிகரிலார் சம்பந்தர்

### யாரே ஆற்றுவர் அவர் ஆற்றிய பணி

### அவருக்கு நினைவுச்சின்னம் அமைத்தல் எங்கள் கடன்

இந்துசாதனத்தின் ஆசிரியராயிருந்த பண்டிதர் ம. வே. தி. சம்பந்தப்பிள்ளை அவர்கள் சிவபதமடைந்த செய்தியை அறிந்ததும் தமிழகமும் சைவ உலகும் திகிலடைந்திருக்குமென்பதற்கு ஐயமில்லை. காலஞ் சென்ற பண்டிதரவர்களின் பிரிவு பொதுவாகத் தமிழ்ப் பேசும் மக்களுக்கும் சிறப்பாக இந்துக்களுக்கும் ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். பண்டிதரவர்களின் பரந்த அறிவும், விரிந்த நோக்கமும, சிறந்த மனப் பான்மையும் ஆழ்ந்த பேனு எழுத்து வன்மையும் நகைச் சுவை நிறைந்த பேச்சும், சைவப் பண்பும், மக்கள் மனதைக் கவருந் தன்மையுடையன. 40 வருடகாலம் வரையில் ஒரு பத்திரிகையின் ஆசிரியராக இருப்பது சுலபமான காரியமல்ல. இந்த நாட்டில் தொடர்ந்து பத்திரிகை ஆசிரியராக எவருமே இவ்வளவு காலம் இருந்திருக்கமாட்டார்களென்றே நம்புகிறேன்.

நான் அவரிடம் படிக்கவில்லை. ஆனால் அவரிடம் கல்விகற்ற அனேக மாணவர்கள் அவரது அறிவின் ஆற்றலை வியந்து பேசக் கேட்டிருக்கிறேன். நான் மாணவனாக இருந்தகாலத்தில் அவரது நகைச்சுவை நிறைந்த கருத்து மிக்க பேச்சு வன்மையை நேரில் கேட்டிருக்கிறேன். அவரது எழுத்துத் திறமைக்கு அக்கால இந்துசாதன பத்திராசிரியர் பகுதி சிறந்த உதாரணமாகும். "படைவீரர் வாளிலும், பத்திராசிரியர் பேனு வன்மையுடையது" என்னும் ஆங்கிலப் பழமொழி நமது சம்பந்தர்விஷயத்தில் முற்றும் பொருந்தும்.

அக்காலத்தில் வட்டுக்கோட்டை அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலிருந்து வெளியான மாணவர் இதழான ''இளஞாயிறு'' என்னும் பத்திரிகையில் "பரமசிவனுக்கோர் பகிரங்கக் கடிதம" வெளியாயிற்று. அக்கடிதம் இந்து மதத்தின் மீது கேலியாகவே இருந்தது. அக் கட்டுரைக்கு நம் பண்டிதரவர்கள் எழுதிய கண்டனம் நல்ல சவுக்கடி கொடுத்ததுமல்லாமல் அவரது சமயப் பற்றையும் அறிவாற்றலையும் நன்கு புலப்படுத்தியுமுளது. பண்டிதரது கண்டனம் உள்நாட்டில் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணியது. இறுதியில் வட்டுக்கோட்டைக் கல்லூரி அதிபரே, தாங்கள் அக் கட்டுரையைப் பிரசுரம் செய்ய அனுமதித்தது தவறென பொது மக்களிடம் வருத்தம் தெரிவித்துக்கொண்டதற்கும் காரணராயிருந்தவர் நம் பண்டிதரே. இக்காலத்திலும் மத தூஷணம் செய்யும் நம்மவர்க்கும் பிள்ளை அவர்களின் கண்டனங்கள் பொருத்தமுடையனவாகும். இது நிற்க,

"உலகம் பலவிதம்" என்று இப்பொழுதுதான் பேசும் படம் வந்திருக்கிறது. நம் பண்டிதரவர்கள் அக்காலத்திலேயே

**திரு. வெ. சு. நடராசா**

**கொழும்பு**

எழுதிய உலகம்பலவிதக் கதைகளுக்கு நம் நாட்டிலல்லாது பிறநாடுகளிலும் நல்ல மதிப்பு இருந்தது. மலாய் நாட்டில் வாழ்க்க யாழ்நாட்டு நங்கையர்கள் இந்துசாதனம் பத்திரிகை எப்போது வரும் எப்போது வரும் என்று எதிர் பார்த்தவண்ணமேயிருந்து படித்து மகிழ்வார்களாம். இந் நவீன நாவல்களில் "கோபால நேசரத்தினம்" 'துரைரத்தினம்நேசமணி' ஆகியவைகள் முதல்தரமானவையெனலாம். சில பேசும் படம் பிடிப்பதற்கு உகந்தன.

மாணவருக்கு ஏற்ற முறையில் பாலபாடங்களை எழுதி வெளியிட்டதன் மூலம் அன்னாரின் மாணவ மனப்பான்மையை நன்கு உணரலாம். கல்விசம்பந்தமாகவும், பத்திரிகை ஆசிரியத்தொழில் சம்பந்தமாகவும், பள்ளி ஆசிரியத்தொழில் சம்பந்தமாகவும் சமய சம்பந்தமாகவும், "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் வாக்குக்குப் பொருத்தமானதுபோல பலதொழிலையும் ஒரே முறையில திறம்படச் செய்துவந்த நமது சம்பந்தருக்கு நிகர் யாரேயாவர், சம்பந்தரவர்கள் செய்த அரும்பணி செய்ய யார் முன்வரப் போகிறார்கள். அவரே மீண்டும் தோன்ற வேண்டும். அவருக்காக ஈழநாட்டில் ஓர் நினைவுச் சின்னம்எழும்ப வேண்டும்.

# வழிபாட்டு முறை

### அறிவுவளர்ச்சிக்கேற்ற அமைப்பு

[ பண்டிதர் சு. இராமசாமி அவர்கள், கருங்காலி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் 15-7-55 ல் நடைபெற்ற கார்த்திகைத் திருவிழாவின்போது நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம். ]

சிந்திக்கும் நிலையைப் பெற்ற மனிதன் விலங்கு நிலையிலும் மேம்பட்டவனாய், தன் எதிர்காலத்தைப் பற்றி நினைப்பவனாய், தனக்கு அறியப்படாதனவும், அளவிறந்த ஆற்றலுடையனவுமான பல பொருட்களுண்டென்றும், அவற்றால் தனக்குத் துன்பம் இன்பம ஆகியவை உண்டென்றும் நம்பினான். முதல் அச்சங் காரணமாகவே இடி, மின்னல், பூகம்பம் முதலியவற்றை உண்டாக்கும் தெய்வமொன்று இருப்பதாக நினைத்து அதனை வாழ்த்தி வணங்கினான். பின்னர் தனக்கு நன்மை செய்வதாகவுள்ள முகிலுக்கு அதிதெய்வமாக இந்திரனையும், வெளிச்சம் வெப்பம் தருவனவாகிய சூரியனையும் நன்மை கருதி வணங்கி, வழிபாடியற்றினான். படிப்படியான இவ் வழிபாட்டுடன் ஆராய்ச்சி ஞானமுந்தோன்றவே, அறியப்படாத கடவுளைக் கற்பனை உருவத்தில் வைத்து வணங்கும் ஆர்வம் ஏற்பட்டது. தொடக்கத்தில் தனித்தும் சிலர் சேர்ந்தும் மரத்தடி, சந்திகள், ஆற்றிடைக்குறை, மலை முதலியவற்றில, திறந்த வெளியில வழிபட்டு வந்த வணக்கம், கூட்டம் அதிகப்பட அதிகப்பட பெரிய கட்டிடங்களும், பூசை திருவிழாச் சிறப்புக்களுமாய் வளர்ந்து விட்டன. இவைகளுக்குச் சட்ட திட்டங்களும அறிஞர்களால் அமைக்கப்படலாயிற்று; வழிபாட்டு முறைகளும், கடவுட்டிருவுருவங்களும் தத்துவக் கருத்துகளுடன் ஏற் ஏற்படலாயின. தொடக்கத்திற் பலியிட்டுப் படைத்து வந்த வழிபாடு, அறிவு முதிர்ச்சியினுல் மாற்றமடையலாயிற்று. இன்று நடைமுறையிலிருக்கும் வழிபாட்டு முறையிலும் எதிர்காலத்தில மாற்றமுண்டாகும் என்பதை நபுவதில் இழுக்கு யாதுமின்று. 'ஆலயம்' என்பது எப்பொழுதும் மதிப்புககுரிய சிறந்த இடமாகவே திகழ்ந்து வருகின்றது. மனிதனின் உபயோகத்துக்குரிய எல்லா இடங்களைக் காட்டிலும கோயில் எத்தனையோ மடங்கு பூசித்தற்குரியது. அறிவினுலும் ஆராய்ச்சியினுலும் அறியப்படாத கடவுளின் இருப்பிடம் என்பதே அதற்குக் காரணம்.

எப்பொழுதும் மனைவி, மக்கள், உடைமை, அதிகாரம் என்ற உலகச் சூழலில் மயங்கித் தவிக்கும் மக்கள், சிறிது நேரமாயினும் அவற்றை மறந்து, உயர்ந்த சிந்தனைக்கு உட்பட்டு மனத்தை ஒருவழிப்படுத்தி, அப்பரம்பொருளில் ஒன்றி நிற்பதற்கே நாம் ஆலயத்துக்குப் போகிறோம். 'ஆலயம்' என்ற சொல்லின் பொருளும் அதுவே. 'கோயில்' என்றசொல்லோ தலைவனின் வீடு என்ற பொருள்படும். ஆகவே, நமக்கு மன ஒருமையைத் தரக்கூடிய பரம் பொருளின் வீடு அது என்பதை மனத்தி லிருத்தி எங்கள் வழிபாடு ஒழுக்கம ஆகியவற்றை அதற்குத் தகுந்தபடி அமைக்கவேண்டும்.

### கைலஞ்சக் குற்றச்சாட்டு

கைலஞ்சக் குற்றச்சாட்டுத் தொகை 3769 ஆகிவிட்டது.

### அநுதாபக் கூட்டம்

நிகழும் மன்மதஹூ ஆடி மீ காந்திஜி (26-7-55) திங்கட்கிழமை காலை காரைநகர் சைவ பரிபாலன வித்தியாலய திருநாவுக்கரசு நாயனர் மண்டபத்தில் சைவம் வளர்த்த பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்களின் பிரிவைப்பற்றி அநுதாபக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் வித்தியாலய அதிபர் ஸ்ரீமான். இ. நாகலிங்கம் அவர்கள் பண்டிதர் அவர்களின் அற்புத வாழ்க்கை நலன்களை எடுத்துரைத்து அவர்களின் பிரிவால் பொதுவாகச் சைவ உலகிற்கும், சிறப்பாக யாழ்ப்பாணத்திற்கும் பெரும் நட்டம் ஏற்பட்டிருக்கிறதென்றும், சைவ சமயத்தைப் பரிபாலித்து வருகின்றதாகிய வித்தியாலயத்துக்கு அதிக நட்டத்தை உண்டாக்கியிருக்கின்றது என்றும் எடுத்துரைத்தார். பின்னர் அநுதாபப் பிரேரணை ஒன்றும ஏகமனதாய் நிறைவேறியது.

யாழ்நகர்க் கல்லூரி

# விளையாட்டுப் போட்டி

சனிக்கிழமை 23-7-55 பிற்பகல் காரைநகர் யாழ்நகர்க் கல்லூரி மாணவர்களின் விளையாட்டுப்போட்டி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இராமநாதன், நாவலர், நடராசா ஆகிய இல்லங்கள் முறையே சிவப்பு, பச்சை, நீலம் என்னும் வண்ணங்களைத் தாங்கிப் பார்ப்போரது கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன.

நிகழ்ச்சிநிரலில் குறிப்பிட்டபடி போட்டி அன்று பி.ப. 3 00 மணிக்கு ஆரம்பமாயிற்று. போட்டி நடக்கும்போது எந்த இல்லம் தலைமை விருது தாங்கும் என்று சொல்ல முடியாதபடி மூன்று இல்லங்களும் மாறி மாறி முன்னணியில் நின்றன. சிறப்பாக, நாவலர், நடராசா இல்லங்கள் கடைசிவரையில் முடிவு கூற முடியாதவகையில் வெற்றிக்கு முந்தின. போட்டிகள் இறுதியாக மாலை 6-15 க்கு முடிவுற்றன. அப்பொழுதுதான் நடராசா இல்லம் முதலாவதென்றும், நாவலர் இரண்டாவதென்றும் இராமநாதன் மூன்றாவதென்றும் தெரியவந்தது. போட்டியைக் கண்டு களிக்கவந்த மக்கள் அனைவரும் விளையாட்டுப் போட்டியில் மிக ஈடுபட்டவராய் ஆனந்தமடைந்ததோடு ஆர்வமும் காட்டினர்.

திரு. W. E. C. ஜெபநேசன் (Jaffna) A.S.P. அவர்கள் தலைமைவகித்து விளையாட்டுப் போட்டி பெருமையுற்றது. அவர்கள் வெற்றி பெற்ற மாணவர்க்குப் பத்திரங்களும வெள்ளிக்கிண்ணங்களும் வழங்கினர்கள். அவர் பேசும்போது விளையாட்டுப் போட்டியைத் தாம் கண்டு நன்கு களித்ததாகக் கூறினர். தம்முடைய தம்பியாரது நினைவுக்காக ஆண்டுதோறும் வெள்ளிக் கிண்ணமொன்று திறமையான நிகழ்ச்சிக்கு வழங்குதற்குத் தாம் முன்வருவதாக அவர் அத்தொடர்பிற் கூறியது எல்லோருடைய உள்ளங்களையும் மகிழச் செய்தது.

### பாபுராவுக்கு ஆறுவருடம்

பண்டித நேரு அவர்களைக் கொல்ல முயன்றார் என்ற குற்றச்சாட்டின்படி பாபுராவுக்கு ஆறுவருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 7—8—55 —— 13—8—55

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

இந்தவாரம் முழுதும் இனத்தவர்களுடன் சண்டைகளைத் தவிர்க்கவும். புது முயற்சிகள் கவனமாய்க் கையாளப்படவேண்டும் நண்பருடன் பிழைஎண்ணங்களுண்டாவதற்கு அறிகுறியிருக்கின்றது வார இறுதி கடல்கடந்த சில நாடுகளிலிருந்து சில நல்ல புதினங்களைத் தரும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

வழக்கமான நடைமுறை வேலைகள் இந்தவாரம் நல்ல பலனைத் தரும். இப்பொழுது வருகின்ற எந்த மாற்றமும் பின்னுக்கு உதவியாயிருக்கக்கூடும். நீர் சில புது நட்புத் தொடர்புகளை உண்டாக்குவீர். வார இறுதியில் நண்பருடன் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

புது முயற்சிகளுக்கு நல்லவாரம், ஆனால் உமக்கு மனச்சமாதான மிருக்கமாட்டாது. பண நிலைமைகள் திருந்தவேண்டும். பகைவர் அழிவுக்குமிடமுண்டு.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்தவாரம் உம்முடைய தேக சுகம் நல்லாயிருக்கமாட்டாது. நீர் அதிக இடைஞ்சலையும் எதிர்ப்பையும் முன்னிடுவீர். குடும்பச் சூழலிலும் சில சண்டைகளுண்டாகும். பிள்ளைகளுக்குச் சுகவீனத்துக்கிடமுண்டு.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

செலவதிகரிக்கும். தேவையில்லாத அவமானங்களுண்டாகும் அவற்றால் உம்முடைய மனச்சமாதானம் பங்கப்படும் சகோதர சகோதரிகள் உம்முடைய கருமங்களில் உதவியாயிருப்பர். முதல் மூன்று நாட்களும் மிக வருத்தமானவையாயிருக்கும்

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

புது முயற்சிகளுக்கு முதல் மூன்று நாட்களும் நல்லாயிருக்கும் செவ்வாய் பிற்பகல் புதன் வியாழன் கவனமாய்க் கழிக்க வேண்டும். வார இறுதி திரும்பவும் நன்றாகும்.

**துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

கடைசி இரு நாட்கள் தவிர இந்தவாரம் மிக நன்றாயிருக்கும். நீர் மிக முயன்று வேலைசெய்ய வேண்டியிருந்த போதிலும் நல்ல பலன் பெறுவதுபற்றி நீர் நிச்சயமாயிருக்கலாம். கடைசி இரு நாட்களும் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம அநுஷம், கேட்டை.**

பணத்துறையில் நல்லவாரம். ஆனால் கருமங்களை நீர் இலகுவாக ஒழுங்குபண்ண முடியாது. அவமானங்களும் தேவையில்லாத குற்றச்சாட்டுகளும் உம்மை அதிகம் நிலைகுலைக்கும் கூடிய பொறுப்புக்களை நீர் ஏற்கவேண்டி வரும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

உம்முடைய சொந்தச் சிக்கல்களில் இந்தவாரம் சிறிது ஆறுதலுக்கிடமுண்டு மிகுந்த பொருத்தமான வேலையின் பின்பே புதுமுயற்சிகள் நல்ல பலனைத் தரும். வார இறுதியில் நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**மகராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

குடும்பக்காரியங்கள் தொடர்ந்து சிக்கலாகவேயிருக்கும். அவமானங்களுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடங்கொடுக்க வேண்டாம். சமுகத்துறையில் நல்லவாரம் புகழும் முயற்சிகளிற் சித்தியும் நிச்சயம்.

**கும்பராசி அவிட்டம் 3, 4 பாதம, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்தவாரம் பகைவரழிவுக்கிடமுண்டு, உம்முடைய காரியங்களில் உமக்கிருந்த எவ்வித எதிர்ப்பும் அமைதியாக அகன்று விடும் புகழும் தனலாபமும் நிச்சயம்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

பணத்துறையில் நல்ல வாரம். நீர் இழந்ததாக நினைத்திருந்த சில பணங்களைத் திருப்பிப் பெறக்கூடியதாயிருக்கும். வார இறுதியில் பிதா வழி இனத்தவர் சில தொந்தரவுகளை உண்டாக்குவர்.

---

# "தமிழ்க் கந்தம்" விளக்கும் இலக்ஷியம்

கந்தரோடை "தமிழ்க் கந்தையா வித்தியாசாலை" வெளியிடாகிய "தமிழ்க் கந்தம்" அவ்வித்தியாசாலை வளர்ந்தோங்கிச் சிறந்த தொண்டாற்றுதற்கு திரு அம்பலவாணர் கந்தையா உபாத்தியாயர் திரு சி. கந்தையா உபாத்தியாயர் வைத்தியகலாநிதி எஸ். சுப்பிரமணியம் அவர்கள் திரு. எஸ். எம். அப்புத்துரை அவர்கள் ஆகியோர் செய்த சேவைகளை ஏனையோர்க்கும் முன்மாதிரியாக எடுத்துக்காட்டுகின்றது. பாராட்டுக்குரிய பல செய்திகளோடு கல்விக்கழகங்களின் இலக்ஷியம் என்ன என்று காட்டும ஒரு கட்டுரையையும் அது தருகின்றது கல்வி உலகுக்கு உதவக் கூடிய அதன் சில பகுதிகள் இங்கே காணவருகின்றன.

"வானம் அளாவிப் பரந்து ஓங்கி நிற்குங் கட்டிடங்கள் எல்லாம உண்மையான கல்வி நிலையங்கள் ஆகா. மாணவர்கள் செம்மையுடன் கலை பயிலும் நிலையம் எதுவோ அதுவே நற்கலை நிலையம் ஆகும். இன்றைய இளைஞர்கள் வருங்காலத் தலைவர்கள் ஆகையினாலே அவ்விளைஞர்களை நல்வழிப்படுத்திச் சிறப்புறச் செய்தல் நமது பெருங் கடனாகும். இப்பெருங்கடனை நிறைவேற்றுவதே தேசத் தொண்டாகும.

மாணவர்கள் கடவுட்பக்தியுடன் நல்லொழுக்க வழி நின்று கலைபயின்று இனிது வாழ வழிகாட்டும் பெருமை ஆசிரியர்களைச் சார்ந்தது. மாணவர்களின் அன்றாட வாழ்விலும் பழக்க வழக்கங்களிலும், ஆசிரியர்கள் கண்ணுங் கருத்துமாயிருத்தல் வேண்டும் இத்தகைய மாணவர்களையும் ஆசிரியர்களையுங் கொண்ட கலவி நிலையங்கள் நாடெங்கும் பெருகிவளரவேண்டும். இந் நிலையங்களில் குறுகிய வேறுபாடுகளின்றி எல்லோருங் கல்விகற்று முன்னேற வேண்டும். வறுமையால் வாடும் எத்தனையோ இளஞ் சிறுவர்கள [illegible] னல் நீங்கி இனிது [illegible] தேறுதற்கு வாய்ப்பாக இருப்பவைகளே முன்னர் யாங் குறித்த சிறந்த கலவி நிலையங்கள். இவற்றை நிறுவுபவர்களும், நடாத்துபவர்களும், உதவி புரிபவர்களும் உண்மையான தொண்டர்களாவர். இத்தகைய நோக்கத்துடன் கந்தரோடையில் வாழ்ந்த தமிழ்த் தாத்தா கந்தையா ஆசிரியர் அவர்கள் நிறுவிய தமிழ்ப் பாடசாலையை நினைக்கும்போது அவருடைய பரந்த நோக்கத்தையும், சிறந்த செயலையும் பாராட்டாமல் இருக்கமுடியுமா?

.... .... .... .... .... .... .... ....

.... .... .... .... .... ... இவை யாவும் பேச்சளவில் நிலவிடாது அவரைப் பின்பற்றி ஆக்கத்துக்குரிய காரியங்களைச் சிறப்புறச் செய்வதும், அவருடைய கல்லூரியைப் பாதுகாத்து வளர்ப்பதும் நமது பெருங் கடனாகும்."

இவற்றைச் சைவமக்கள் சிந்தித்துச் செயலாற்றில் [illegible] சமூகம் சிறப்புற்று விளங்கும்.

## கொடி எரிப்பு கைவிடப்பட்டது

இந்தி எதிர்ப்புக்கு அறிகுறியாக இந்திய தேசியக் கொடியையெரிப்பதாக திராவிட முன்னேற்றக் கழகத்தார் செய்திருந்த தீர்மானம கைவிடப்பட்டது.

---

## ஸ்ரீ முன்னேஸ்வரம் மகோற்சவம்

ஸ்ரீ முன்னேஸ்வரம் திருக்கோயில் மகோற்சவம் ஆடி 21-ந் திகதி (6-8-55) கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகின்றது. ஆவணி 12, 13, 14, 15 ந் திகதி ஆகிய நாட்களில் சிவனடியார் திருவிழா, பிக்ஷாடனர் திருவிழா, நடேசர் திருவிழா, வேட்டைத் திருவிழா என்பவை நடைபெற்று ஆவணி 16-ந் திகதி (1-9-55) வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் 17 உ (2-9-55) வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுமென ஆதீன பரிபாலன கர்த்தா அறியத் தருகின்றார்.

---


அடைவு நகை ஏல விற்பனவு

விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் சொக்குவில் மேற்கில் இருக்கும் த. பொன்னையாபிள்ளை அவர்கள் கடையில் 12-7-1952 முதல் 30-5-1955 வரைக்கும் அடைவு பிடித்த மீட்கப்படாத தவணை தப்பிய நகைகளை 1955ம் ஞு ஆவணி மாசம் 16 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்,

பொ. இராசரத்தினம்
P. RAJARETNAM
கொம்மிஷனர்.
M 94 29-7-55


---

## தமிழ்க் கலாசாரம் அன்றும் இன்றும்

கொழும்பு தமிழ்க் கலாசாரசபை ஆதரவில் சபைத் தலைவர் நீதிபதி ஸ்ரீ சிறீ நாகலிங்கம் அவர்கள் தலைமையில் வண சுவாமி கலாநிதி சேவியர் எஸ். தனிநாயகம் அவர்கள் தமிழ்க் கலாசாரம் என்னும் பொருள்பற்றிப் பேசும் போது இக்காலத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அறிய வேண்டிய பல அரிய கருத்துக்களை வெளியிட்டார்.

தலைவர் அவர்கள் பேசும் போது இன்று ஈழத் தமிழ் மக்களின் நிலைமை மிகுந்த வருத்தந் தருவதாயிருக்கின்றதென்பதை எடுத்துக் காட்டி வற்புறுத்தினார்.

## அரசியல் திட்டத்தைத் திருத்துக

யாழ்ப்பாணத்தில் நடந்த இலங்கைச் சமசமாசக் கட்சிக் கூட்டத்தில், முதல் மந்திரி தான் கொடுத்த வாக்குறுதியை மறுத்தமை பற்றிக் கண்டித்து, தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழிகளுக்கும் சம உரிமை கொடுக்கும் திருத்தத்தை அரசியல் திட்டத்தில் உடனே செய்ய வேண்டும் என்று பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டது.

---

## இசை வித்துவானுக்குப் புகழ்மாலை

திருக்கேதீச்சரம் திருப்பணிக்கு உதவியாக ஸ்ரீ ராம் குமாரசுவாமி அவர்கள் யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் அளித்த இசைவிருந்தின் உயர்வு பற்றி அமைச்சர் ஸ்ரீ நடேசன், சேர் கந்தையா வைத்தியநாதன் தென்னிந்திய நாதஸ்வர வித்துவான் குளிக்கரை பிச்சையப்பா முதலியோர் மிகப் பாராட்டிப் பேசினர்கள்.

## வாழ்க்கை வானில்......

[ 2-ம் பக்கத் தொடர்ச்சி ]

அர்ப்பணிக்கின்றேன் என்று ஒருவர் சொல்லி வீரப் பட்டம் பெற்றுக் கொள்ளலாம். ஆனாற்செய்தித் தாள்கள் தந்த இந்த அர்ப்பணப் புதினத்துக் காதாரமில்லையென இன்னொரு செய்தி வெளிவந்திருக்கின்றதை நோக்குமிடத்து எல்லாங் கட்டுக் கதைபோலத் தோன்றுகின்றது.

## சுந்தரமூர்த்திநாயனர் குருபூசை

### யாழ்பாணம் இந்துக்கல்லூரியில்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்வித்தியாசாலையில்(27-7-55) மன்மத ஆடி 11 புதன்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமையம் மாணவர்கள் இனிமை பொருந்திய கூட்டுப்பிரார்த்தனைப் பாக்களை ஓதிச் சபையோரை மகிழ்வித்தனர். மேற்படி பாடசாலை ஆசிரியர் திரு. சொ. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் மாணவர்கட்கு எளிதில் விளங்கும் வண்ணம் "சுந்தரமூர்த்தி நாயனர்" சரித்திரத்தை சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார். பின்னர் மாணவர்களுக்குப் பிரசாதம் கொடுக்கப்பட்டு இனிது நிறைவெய்தியது.

### தெல்லிப்பழை கிழக்கில்

தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் 27-7-55-ல் மேற்படி குருபூசை சிறப்பாக நடைபெற்றது. அன்று பிற்பகல் தலைமையாசிரியர் திரு. செ. சிவசுப்பிரமணியம அவர்கள் தலைமையில் பிரமஸ்ரீ மு. சிவகடாட்சக்குருக்கள் அவர்கள் நாயனர் சரித்திரத்தையும் அவர்கள் செய்த அற்புதங்களையும், இக்கால மாணவர்களின் கடவுள் பக்தி, ஆலய வழிபாட்டின் அவசியம், முதலியவைகளையும் விளக்கிக் கூறினர். ஆசிரியர் திரு. ஆறுமுகம் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டிலே
இல. 11382
வட்டுக்கோட்டை இராசாசோம சுந்தரம்
வழக்காளிகள்.
எதிராக
1. வண்ணார்பண்ணை மேற்கு ஒட்டுமடம் சின்னத்தம்பி பொன்னையா
2. சண்டிக்குளி, செல்லிப்பிள்ளை ஜயரத்தினம் இராசரத்தினமும்
3. ஷை பெண் அருள் இராசமலரும். —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11382ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகள் 1955 ஞூ புரட்டாதி மீ 10 ௨ சனிக்கிழமை முற்பகல் 10. மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை "பள்ளவயல்" நெல் பரப்பு 2 எல்லை கிழக்கு றோட்டு. வடக்கு இராசதுரை கைம்பெண் கேதாரேஸ்வரிக்குடையவாதனம். அதாவது கட்டிடத்துக்கு நடுவால் நேரே போகிற சுவர், மேற்கு கனகர் கைம்பெண் சின்னத்தங்கத்துக்குடைய வாதனமும் மறு பேரும், தெற்கு கணபதிப்பிள்ளை சுப்பையாவுடைய வாதனம். இக்காணி D 213/170ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

முழுக்காணி 15 பரப்புக்கும் இந்த 2 பரப்பு தெற்குத் துண்டு முழுக்காணியும் D 115/34ம் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

2. ஷையிறை புங்குகின்ற மணல்காடும் மணலி ஓடையும் $1\frac{7}{8}$ பரப்பு (கிஃப்பரப்பு) வீடும செய் பயிரும் இக்காணிக்குரிய கிணற்றுப் பங்கும் அதாவது மேற்குப் பக்கத்தில இருக்கும்கையொழுங்கையில்இருக்கிற கிணறு, எல்லைகிழக்கு கணபதி சின்னனும் பங்காளருக்கு முரிய காணிகள். வடக்கு றோட்டு. மேற்கு கையொழுங்கை. தெற்குக் கீழே சொல்லப்பட்ட 3ம் காணி; இக காணி D 217/185ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

3. ஷையிறை புங்குகின்ற மணல்காடும் மணலியோடையும் கி. பாப்பு 3ம் செய்பயிரும் வான்பயிரும் பனைகளும் வடக்குப் பக்கத்திற் காணிகுள் மேற்செல்லையிலிருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப்பங்கும் வழமையான வழிவாய்க்காற் பாவிப்புரித்தும். தெறகுப்பக்கத்தால் றோட்டுக்குப் போகும் வளிப்பாதையுரித்தும் எல்லை கிழக்கு ஐயன் செல்லனுக்கும் பங்காளருக்கு முடையவாதனங்கள் வடக்குக் கணபதி சின்னனுக்கும் பங்காளருக்கு முடைய வாதனங்களும், மேற்சொல்லிய 1ம் வாதனமும் வழிப் பாதையும், மேற்குக் கந்தன் பண்டாரிக்குடைய வாதனம், தெற்கு பொன்னன் பெண் சின்னனுக்குடைய வாதனம். இக காணி D 217/186 ம் இலக்கப் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

இதைப்பற்றி வேறுவிபரம்அறிய விரும்பினால் பிறக்டர் வண்ணார் பண்ணை உவாட் & டேவி லேன. சிவசுப்பிரமணியம் அவர்களிடம் அறிந்துகொள்ளலாம்.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனர்.
யாழ்ப்பாணம்
1955ம் ஆ ஆடி மீ 29ந்உ
M 101 5-8-55. (௲ 200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
சங்கானை மேற்கு சீனிவாசகம் கைம்பெண் தங்கமுத்து
—வழக்காளி
விரோதமாக
இல. 11340
சுளிபுரம் இளையதம்பி மாசிலாமணி கைம்பெண் நல்லபிள்ளை
எதிராளி,

குறித்தகோட்டார் மேற்குறித்த இலக்க வழக்கில் எனக்கனுப்பிய கமிஷன் கட்டளைப்பிரகாரம் இதன் கீழ்க்காணப்படும் காணிகள் 1955ம் ஆ செப்டெம்பர் மீ 10 ம் உ (ஆவணி 25) சனிக்கிழமை முற்பகல் 10 மணி துவக்கம் முறையே குறித்த காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 1165/=ம் இதில் ரூபா 1000/- க்கு 3-7-54 தொடகக்ம் 2-10-54 வரையும் ஞூ 1 க்கு 100 க்கு 12 வீத வட்டியும் அதன் பின் மொத்தத்தொகைக்கு 2-10 54 தொடக்கம் இறுக்குந் திகதி வரையும் ஞூ 1க்கு 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 181—32ம் (அதாவது) முன் பொறுத்த செலவு ரூபா 121-38, கமிஷனன் விட்ட செலவு ரூபா 32—82 இனிமேல் வருஞ் செலவு ரூபா 27—12)

பெ. முத்துத்தம்பி
வெந்தீஸ்கமிஷனர்.
சுதுமலைதெற்கு மானிப்பாய்,
195⁵ம் ஆ ஜூலை மீ 25 ௨

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிமேற்கு சங்கானைக் கோயிற்பற்று சுளிபுரம் இறை செல்லியான் நில பா ஆறரை ($6\frac{1}{2}$) யும் கிணறும் வீடும் வான் செய் பயிர்களும் எல்லை கிழக்கு இளையதம்பி வயித்திலிங்கத்துக்கும் பங்காளருக்கும் மறுபெயர்களுக்கும் உரிய ஆதனம். வடக்கு சபாபதி வைத்திலிங்கத்துக்கும் பங்காளருக்கும் மறுபெயர்களுக்கும் உரிய ஆதனம். மேற்கு சபாபதி வைத்திலிங்கத்துக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை இதடங்கலிலுமிதைச் சேர்ந்தவைகளிலும் சொரியலாய் நில பா இரண்டும் (2ம்) அதைச் சேர்ந்தவைகளும்.

(2) மேற்படி இறை மழுவை. நில. பா. ஆறு (6) எல்லை கிழக்கு செல்லர் தம்பையாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கு றோட்டு மேற்கு வைத்திலிங்கம் நாகலிங்கத்துக்குரிய ஆதனம். தெற்கு சபாபதி வைத்திலிங்கத்துக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். இதடங்கலும்

பெ. முத்துத்தம்பி
வெந்தீஸ் கமிஷனர்.
25-7 55
M97 5-8 (௲ 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
மானிப்பாய் செல்லப்பா வைரமுத்து — வழக்காளி
இல 11389
விரோதமாக
1 மானிப்பாய் பொன்னர் அம்பலமும்
2 மானிப்பாய் பொன்னர் அப்பத்துரையும் எதிரிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் குறிதத கோட்டார் எனக்கனுப்பிய கம்மிஷன் கட்டளைப்பிரகாரம் இதன்கீழ்க் காணப்படும் காணிகள் 1955 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 17 ௨ (புரட்டாதி 1) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 1329-16 இதில ரூபா 100 கழித்து மிகுதியும், இன்னும் ரூபா 1000 க்கு 14-7-54 தொடககம் 28-10-54 வரையும் வருடமொன்றுக்கு 100 க்கு 10 வீத வட்டியும் அதனபின் மொத்தத் தொகைக்கு இறுக்கும் திகதி வரையும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 185-85 ம்

பெ. முத்துத்தம்பி
வெந்தீஸ் கமிஷனர்
சுதுமலை தெற்கு மானிப்பாய்
1955 ம் ஆ ஜூலை மீ 28௨

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிமேற்கு மானிப்பாய்க் கோயிற்பற்று மானிப்பாய் இறை பெரியபுலம் நிலை பா நாலும் குளிகாலும் எல்லை கிழக்கு பூதன் பெண் மாணிக்கத்தின் ஆதனம் வடக்கு கந்தையா பெண் மாரிமுத்துவின ஆதனம், மேற்கு குட்டியன சுப்பையாவின் ஆதனம் தெற்கு சிவலை சின்னையாவுக்கும் பெண் நாகம்மாவுக்கும் உரிய ஆதனமும் ஒழுங்கை முகப்பும் இதடங்கலிற் சொரியலாய் நில பா இரண்டும் 1-ம் எதிரி பொன்னர் அம்பலத்தால் கட்டப்பட்ட கல்வீடு முழுவதும்.

பெ. முத்துத்தம்பி
வெந்தீஸ் கமிஷனர்
28-7-55
M 98 5-8 (௲ 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோப்பாய் தெற்குக்குடி
(1) S. S. றிச்சேட்ஸ்ம் பெண்
(2) ஜேன் அன்னம் றிச்சேட்சும்
— வழக்காளிகள்
எதிராக
இல 10273

உடுவில் குடி தற்போது அனுராசபுரம் பிறின்ஸ் குவாட்டேஸ்ல
1 கணபதிப்பிள்ளை ஜாட்ஸ் துரைசிங்கமும் பெண்
2 றோஸ் நல்லம்மா துரைசிங்கமும்
3 ஜேக்கப் சுந்தரம் கைம்பெண் காலஞ்சென்ற விஞமுத்துப்பிள்ளையின் ஆதனங்களின் பராபரிப்புக்காரனஜேக்கப் சுந்தரம் தம்பித்துரை உடுவில், தற்போது கொழும்பு போட் கிறைம்ஸ் பொலீஸ்ல
எசிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 10273 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955ஞூ புரட்டாதி மீ 15 ௨ வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடககுப் பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவிலிறை கூத்தான் வளவு பா. கி. இலா 9 1/4 ஒன்பதேகாலும் கல் வீடும் பயிர்வகைகளும மேற செல்லைக்கிணற்றில் பஙகும் குளிக்கும் அறையும் மலகூடமும் எல்லை கிழக்கு காலஞ்சென்ற A R சினேலின் உருமைக்காரின ஆதனம் வடக்கு ஒழுஙகையும் முத்துத்தம்பி பெண் சின்னச்சியினதனமும, மறு பேரும், மேறகு ஒழுங்கையும் முத்துத்தம்பி பெண் சின்னச்சியினதனமும், தெற்கு முத்துததம்பி பெண் சின்னச்சியினதனம். இதடங்கலிற் சொரிபலாக 3/4 பங்கு இது பதிவு கந்தோரில் H 214/256 ல் பதிவு செய்யட்பட்டிருக்கிறது.


S. Ratnasabapathy,
Commissioner of Sales
51, 4th Cross Street
Jaffna,
M. 100. 5—8 (௲ 200)

# அணிந்துரை அரங்கம்

### திருக்கேதாரயாத்திரை

தருமபுர ஆதீனம் 25வது குருமகா சந்நிதானம் ஸ்ரீ லஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஆணைப்படி ஆதிகுருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் குருபூசை மலராய் ஸ்ரீமத் சோமசுந்கர தம்பிரான் சுவாமிகளால் தருமபுரம் ஞானசம்பந்தம் அச்சகத்தில அச்சிடுவித்து வெளியிடப்பெற்றது.

இது ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் முதலிய அன்பர்களுடன் குருமகா சந்நிதானம் அவர்கள் யாத்திரைகளுள் அரியதாகிய திருக்கேதார யாத்திரை செய்தபொழுது கண்ட காட்சிகள் பெற்ற அனுபவங்கள், யாத்திரீகர்கள் அனுட்டிக்க வேண்டிய முறைகள்முதலியவற்றைத் தருவது இத்தகைய யாத்திரையை மேற்கொள்ளுவோர் மிகமிகச் சிலரேயெனினும தவப் பேறாய் யாத்திரை செய்யும் பேறு பெற்றவர்களுக்கு அளவிலா ஊக்கம் கொடுத்துப் பேருதவி புரிவதாய் விளங்குகின்றது.




# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பஙகுகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறாப்பர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai. Jaffna on Friday August. 5 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org